2026 தேர்தலில் குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்டுவோம்

செய்த சாதனைகள் என்ன? ஒரே மேடையில் விவாதிக்க தயாரா? ஸ்டாலினுக்கு எடப்பாடி சவால்

விருத்தாசலம், ஜூலை.15

யார் ஆட்சியில் என்னென்ன சாதனைகள் செய்யப்பட்டது என்பது குறித்து ஒரே மேடையில் விவாதிக்க தயாரா? என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு எடப்பாடி பழனிசாமி சவால் விடுத்தார்.

விருத்தாசலம், திட்டக்குடியில் அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி நேற்று பிரசாரம் செய்தார். அப்போது அவர் பேசியதாவது:

தமிழகத்தில் அண்ணா தி.மு.க. ஆட்சியில் நிறைய திட்டங்களை உருவாக்கி கொடுத்தோம். தி.மு.க. ஆட்சியில் எந்த திட்டத்தையும் செய்யவில்லை. மகளிருக்கு மாதந்தோறும் 1,000 ரூபாய் கொடுப்பதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சொல்கிறார். அது மக்கள் வரிப்பணத்தில் இருந்துதான் கொடுக்கிறீர்கள். அதுவும் கடன் வாங்கி கொடுக்கிறார். இந்த கடனை யார் கட்டுவது? மக்களாகிய நீங்கள்தான் கட்ட வேண்டும். இப்போது மகிழ்ச்சியாக வாங்கிக்கொண்டிருக்கிறீர்கள். வாங்கிய கடன் மீது வட்டிமேல் வட்டி போட்டு மக்கள் தலையில் கடனை சுமத்த போகிறார்கள்.

கடன் வாங்குவதில் முதலிடம்

இந்தியாவிலேயே சூப்பர் முதலமைச்சர் என்றும், முதலமைச்சர்களுக்கெல்லாம் முதலமைச்சர் என்றும் மு.க.ஸ்டாலின் கூறி வருகிறார். எதில் என்று உங்களுக்கு தெரியுமா?. கடன் வாங்கியதில் சூப்பர் முதலமைச்சர். இந்தியாவிலேயே அதிக கடன் வாங்கி முதலிடத்தில் இருப்பது தமிழ்நாடு. அந்த அளவுக்கு கடன் வாங்கி வைத்திருக்கிறார்.

73 ஆண்டுகளாக காங்கிரஸ், தி.மு.க., அ.தி.மு.க. என மாறி மாறி ஆட்சி அமைத்தார்கள். அத்தனை ஆட்சியாளர்களும் கடன் வாங்கிய தொகை ரூ.5 லட்சத்து 18 ஆயிரம் கோடி தான். ஆனால் 2021ம் ஆண்டு முதல் 2025ம் ஆண்டு வரை தி.மு.க. அரசு ரூ.4 லட்சத்து 38 ஆயிரம் கோடி கடன் வாங்கி இருக்கிறது. 2025 – 26 ல் ரூ.1 லட்சம் கோடி கடன் வாங்கி இருக்கிறார்கள். அப்படியென்றால் தி.மு.க. ஆட்சி முடியும்போது ரூ.5 லட்சத்து 38 ஆயிரம் கோடி கடன் இருக்கும்.

ஸ்டாலினுக்கு சவால்

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களே உங்களுக்கு தில்லு, தெம்பு, திராணி இருந்தால் எந்த இடமென்றாலும் கூட்டத்தை கூட்டுங்கள். அங்கு நான் வருகிறேன். அந்த பொது மேடையிலேயே உங்களுடைய தி.மு.க. ஆட்சியில் என்ன சாதனை செய்தீர்கள் என்று சொல்லுங்கள். அண்ணா தி.மு.க. ஆட்சியில் என்ன சாதனை செய்தோம் என்று நான் சொல்கிறேன். அந்த விவாதத்திற்கு மக்களே நீதிபதிகளாக இருந்து தீர்ப்பு கூறட்டும்.

அ.தி.மு.க. ஆட்சி இருண்ட ஆட்சி என்று ஸ்டாலின் கூறி வருகிறார். கண் மூடினால் இருளாகத்தான் தெரியும். கண்களை விழித்து பார்த்தால்தான் வெளிச்சம் தெரியும். வெளிச்சத்தை கொடுத்த அரசு, அண்ணா தி.மு.க.தான். தி.மு.க.வில் தலைவராக, முதலமைச்சராக கருணாநிதி இருந்தார். அதற்கு பிறகு ஸ்டாலின், உதயநிதி இருக்கிறார்கள். அடுத்து இன்பநிதி வருவார். அரச குடும்பதில்தான் மன்னருக்கு வயதாகி விட்டது என்றால் அவருக்கு அடுத்த நிலையில் உள்ளவர்களுக்கு பட்டம் சூட்டுவார்கள். தி.மு.க.வில் தான் பரம்பரையாக மன்னர் ஆட்சி போன்று பட்டம் சூட்டுகிறார்கள். இந்த வாரிசு அரசு தேவையா?, மன்னர் ஆட்சி வேண்டுமா?. குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்டுகிற தேர்தல் 2026 சட்டமன்ற தேர்தல் ஆகும்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முதலில் உதயநிதியை எம்.எல்.ஏ. ஆக்கினார், அடுத்து அமைச்சர், துணை முதலமைச்சராகிவிட்டார். ஏன், அந்த கட்சியில் வேறு யாருமே இல்லையா?. கருணாநிதி குடும்பத்தில் பிறந்தவர்களுக்கு மட்டுமே அமைச்சர், மந்திரி பதவி, அதிகாரம் கிடைக்கும்.

தமிழகத்திலேயே அதிகமுறை எம்.எல்.ஏ.வாக இருந்த துரைமுருகனுக்கு ஏன் துணை முதலமைச்சர் பதவி கொடுக்கவில்லை. அவரை விடவா தி.மு.க.வுக்கு உதயநிதி உழைத்து விட்டார். கருணாநிதி குடும்பத்தில் பிறக்கவில்லை என்ற ஒரே காரணத்திற்காக துரைமுருகனுக்கு அந்த பதவி கொடுக்கவில்லை.

அண்ணா தி.மு.க.வை பா.ஜனதா விழுங்கி விடும் என்று ஸ்டாலின் சொல்கிறார். திமிங்கலம்தான் பிற உயிரினங்களை விழுங்கும்.

1999ம் ஆண்டில் நாடாளுமன்ற தேர்தலில் தி.மு.க., பாரதீய ஜனதாவுடன் கூட்டணி அமைத்தது. அப்போது தி.மு.க.வை பா.ஜனதா விழுங்கி விட்டதா?. அப்போதெல்லாம் பா.ஜனதா கட்சி மதவாத கட்சி என்று தெரியாதா?. நாங்கள் கூட்டணி சேர்ந்ததால் மதவாத கட்சி என்று சொல்கிறார்கள். இதை நீங்கள் பேசலாமா?. ஒரு மரத்தில் இருந்து மற்றொரு மரத்துக்கு குரங்கு தாவுவதுபோல் நீங்கள்தான் பா.ஜனதாவில் இருந்து காங்கிரஸ் கட்சிக்கு தாவினீர்கள். கட்சியை அடமானம் வைக்கிற ஒரே கட்சி தி.மு.க.தான். எங்களை பற்றி நீங்கள் பேச உங்களுக்கு அருகதை இல்லை. அ.தி.மு.க. எதற்கும் அஞ்சாத கட்சி. நானும் எதற்கும் பயப்பட மாட்டேன். மடியில் கனம் இல்லை வழியில் பயம் இல்லை.

பள்ளிகளில் வகுப்பறையில் மாணவ மாணவிகள் அமர்ந்து கல்வி கற்கும் வகையில் ‘ப’ வடிவில் இருக்கைகள் அமைக்க போகிறார்களாம். அவ்வாறு இருக்கைகள் போட்டால் மாணவர்களுக்கு கழுத்து வலி ஏற்படும். குழந்தைகளையும் ஏன் வாட்டி வதைக்கிறீர்கள். அவர்களை நிம்மதியாக படிக்க வையுங்கள். அடுத்தாண்டு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் அண்ணா தி.மு.க. கூட்டணி மிகப்பெரிய வெற்றியை பெறும். ஆட்சியை பிடிக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

பிரசாரத்தின்போது கடலூர் மேற்கு மாவட்ட செயலாளர் அருண்மொழிதேவன் எம்.எல்.ஏ. மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

விழுப்புரம் அண்ணாமலை பல்கலைக்கழக விரிவாக்க மையத்திற்கு மாணவர் சேர்க்கை அறிவிப்பு வெளியிட வலியுறுத்தி

விழுப்புரத்தில் 17–ந் தேதி அண்ணா தி.மு.க. ஆர்ப்பாட்டம்: எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

சென்னை, ஜூலை 15–

விழுப்புரம், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த ஏழை, எளிய மாணவ, மாணவியர் கல்வி பயிலும் வகையில், அண்ணாமலை பல்கலைக்கழக விழுப்புரம் முதுநிலை விரிவாக்க மையத்திற்கு மாணவர் சேர்க்கைக்கான அறிவிப்பை உடனடியாக வெளியிட திமுக அரசை வலியுறுத்தி 17–ந் தேதி வியாழக் கிழமை விழுப்புரம் மாவட்ட அண்ணா தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:–

திமுக அரசு பதவியேற்ற நாளில் இருந்து, எனது தலைமையிலான அம்மா ஆட்சியில், மக்கள் நலன் கருதி கொண்டுவரப்பட்ட பல்வேறு திட்டங்களை அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு முடக்குவது; நீர்த்துப்போகச் செய்வது;

தான் செய்ததாக ஸ்டிக்கர் ஒட்டிக்கொள்வது போன்ற செயல்களில் மட்டுமே கவனம் செலுத்தி வருகிறது. இந்த அரசு ஒரு செயலற்ற அரசு என்பதை நாள்தோறும் நிரூபித்துக்கொண்டு இருகிறது.

சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகம் வெளியிட்ட, இந்தக் கல்வி ஆண்டுக்கான மாணவர் சேர்க்கை குறித்த அறிவிப்பில், ஸ்டாலின் மாடல் அரசின் தூண்டுதலோடு, விழுப்புரம் நகரத்தில் இயங்கி வரும் அண்ணாமலை பல்கலைக்கழக விழுப்புரம் முதுநிலை விரிவாக்க மையத்தினை மூடும் நோக்கத்தில், இம்மையத்திற்கு மட்டும் மாணவர் சேர்க்கைக்கான அறிவிப்பை இதுவரை வெளியிடவில்லை.

இதன்மூலம் திமுக அரசு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த ஏழை, எளிய, தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு மாபெரும் துரோகத்தை இழைத்துள்ளது. இது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும்.

எனவே, விழுப்புரம், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த ஏழை, எளிய மாணவ, மாணவியர் கல்வி பயிலும் வகையில், அண்ணாமலை பல்கலைக்கழக விழுப்புரம் முதுநிலை விரிவாக்க மையத்திற்கு மாணவர் சேர்க்கைக்கான அறிவிப்பை உடனடியாக வெளியிட திமுக அரசை வலியுறுத்தி, அண்ணா தி.மு.க. விழுப்புரம் மாவட்டத்தின் சார்பில், 17–ந் தேதி வியாழக் கிழமை காலை 9 மணியளவில், கழக அமைப்புச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சி.வி.. சண்முகம் தலைமையில், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில், விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த தலைமைக் கழகச் செயலாளர், கழக சட்டமன்ற உறுப்பினர்கள், கழக சார்பு அணிகளின் துணை நிர்வாகிகள், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டத்தில் பல்வேறு நிலைகளில் பணியாற்றி வரும் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், நகராட்சி, பேரூராட்சி மன்ற இந்நாள், முன்னாள் வார்டு உறுப்பினர்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின்முன்னாள்பிரதிநிதிகளும், கழக உடன்பிறப்புகளும் பெருந்திரளாகக் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில், மாணவ, மாணவியரின் பெற்றோர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

காமராஜரின் 123வது பிறந்த நாளையொட்டி அரியலூரில் அவரது திருவுருவப் படத்திற்கு அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

அண்ணா திமுக ஜெயலலிதா பேரவை சார்பில்

காஞ்சிபுரத்தில் கொட்டும் மழையில் முன்னாள் அமைச்சர் சோமசுந்தரம் பொதுமக்களிடம் துண்டு பிரசுரம்

காஞ்சிபுரம் ஜூலை 15–

காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாத் ஒன்றியத்துக்கு உட்பட்ட ஏனாத்தூர் ஊராட்சியில் மாவட்ட ஜெயலலிதா பேரவை சார்பில் மாவட்ட அம்மா பேரவை செயலாளர் கே யு எஸ் சோமசுந்தரம் மற்றும் ஒன்றிய அம்மா பேரவை செயலாளர் ஏனாத்தூர் அன்பரசு ஆகியோர் ஏற்பாட்டில் வாலாஜாபாத் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் அத்திவாக்கம் டாக்டர் செ ரமேஷ் முன்னிலையில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட காஞ்சிபுரம் மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் வி.சோமசுந்தரம் தலைமையில் ஏனாத்தூர் பொதுமக்கள் இடையே அண்ணா திமுக கழக அரசின் சாதனைகளை எடுத்துரைத்து வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் எடப்பாடியார் தலைமையான அம்மாவின் அண்ணா திமுக அரசு அமைய நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு கொட்டும் மழையை பொருட்படுத்தாமல் நனைந்தவாறே பொதுமக்களிடையே துண்டு பிரசுரங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கழக அமைப்புச்செயலாளர் வாலாஜாபாத் பா. கணேசன் , மாவட்ட பொருளாளர் வி.வள்ளிநாயகம் , மாநில போக்குவரத்து பிரிவு துணை தலைவர் மனோகரன், மாவட்ட பாசறை செயலாளர் வி.ஆர்.மணிவண்ணன் , மாவட்ட மாணவரணி செயலாளர் திலக்குமார், மாவட்ட வர்த்தக அணி செயலாளர் எம்.எம்.மதன், மாவட்ட கைத்தறி பிரிவு செயலாளர் வில்வபதி, வர்த்தக அணி இணைச் செயலாளர் ஆர்.லிங்கேசன், எம்ஜிஆர் இளைஞரணி துணை செயலாளர் சிங்காடிவாக்கம் எஸ்பி.ரமேஷ் , புதுப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் மஞ்சுளா பரணி, ஒன்றிய இளைஞர் அணி செயலாளர் எஸ்.கே.பிரபு, ஒன்றிய மாணவரணி செயலாளர் வெற்றி பாண்டியன் , ஒன்றிய பாசறை செயலாளர் சாமந்திமேடு ஜீவரத்தினம்,

ஒன்றிய எம்ஜிஆர் மன்ற செயலாளர் சேட்டாங்குளம் எஸ்.சசிகுமார், ஒன்றிய சிறுபான்மை பிரிவு செயலாளர் எஸ்.ராஜேஷ், ஏனாத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் வரதன், ஒன்றிய இளைஞர் பாசறை இணை செயலாளர் எஸ். தேவபிரகாஷ், ஒன்றிய வர்த்தக அணி செயலாளர் ஏனாத்தூர் ஆர்.கலையரசி, பூக்கடை எஸ்.மரியநாதன் , மாவட்ட பிரதிநிதி டி.துர்காதேவி தனசேகரன், தகவல் தொழில்நுட்ப பிரிவு ஒன்றிய பொருளாளர் சற்குணம், கரூர் மாணிக்கம், மாவட்ட இளைஞரணி துணைத் தலைவர் வையாவூர் ரமேஷ், ஒன்றிய இளைஞரணி செயலாளர் சேக்காங்குளம் கிஷோர்குமார் உள்ளிட்ட அண்ணா திமுக கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

எம் எம் போர்ஜிங்ஸ் லிமிடெட்

எஸ்விகே டவர்ஸ், ஏ 24/25, திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை–32.

Phone: 91-44-71601000 | E-Mail: corporate@mmforgings.com | Web: www.mmforgings.com | CIN L51102TN1946PLC001473

79வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு (AGM) மற்றும் மின்னணு வாக்குப்பதிவு தகவல்

கார்ப்பரேட் விவகார அமைச்சகம் (“MCA”) வெளியிடப்பட்ட செப்டம்பர் 19, 2024 தேதியிட்ட பொதுச் சுற்றறிக்கை எண்.09/2024 மற்றும் அக்டோபர் 03, 2024 தேதியிட்ட சுற்றறிக்கை எண்கள்.SEBI/HO/CFD/CFD-PoD-2/P/CIR/2024/133 (இனிமேல் கூட்டாக 'சுற்றறிக்கைகள்' என குறிப்பிடப்படுகிறது) மற்றும் இது சம்பந்தமாக பொருந்தக்கூடிய பிற சட்டங்கள் ஆகியவற்றின்படி இதன்மூலம் அறிவிப்பதாவது:

1. வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்களை செயல்படுத்த எம் எம் போர்ஜிங்ஸ் லிமிடெட்டின் (‘கம்பெனி’) உறுப்பினர்களின் 79வது வருடாந்திர பொதுக்கூட்டம் புதன்கிழமை, ஆகஸ்ட் 06, 2025 அன்று மாலை 5.00 மணிக்கு காணொளி காட்சி/இதர ஒளி ஒலி வழிமுறைகள் (VC/OAVM) மூலமாக நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
2. சுற்றறிக்கைகளுக்கு இணங்க, கம்பெனி/எங்களின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் (ஆர்டிஏ) மெசர்ஸ் கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட் (கேமியோ)/டெபாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்த அனைத்து உறுப்பினர்களுக்கும் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு, 2024–25 வருடாந்திர அறிக்கையின் மின்னணு நகல்கள் ஜூலை 14, 2025 அன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன ஆவணங்கள் கம்பெனியின் இணையதளம் https://www.mmforgings.com/uploads/annual_report/Annual_Report_MMF_FY2025.pdf மற்றும் ஸ்டாக் எக்சேஞ்சுகளின் இணையதளங்கள் பிஎஸ்இ லிமிடெட்டின் www.bseindia.com, மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட்டின் www.nseindia.com மற்றும் சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் லிமிடெட் ('CDSL') www.cdslindia.comல் கிடைக்கும்.
3. பதிவு செய்யப்படாத மின்னஞ்சல் முகவரிகள் உள்ள பங்குதாரர்களுக்கு வருடாந்திர அறிக்கை பதிவேற்றப்படும் இணைய இணைப்பை வழங்கும் ஒரு கடிதமும் அனுப்பப்படுகிறது. நிதி ஆண்டு 25க்கான வருடாந்திர அறிக்கையின் காகித நகல்கள் corporate@mmforgings.com என்ற முகவரிக்கு குறிப்பிட்ட கோரிக்கையின் பேரில் மட்டுமே அனுப்பப்படும், அவர்களின் ஃபோலியோ எண் / DP ID மற்றும் கிளையன்ட் ID ஆகியவற்றைக் குறிப்பிட வேண்டும்.
4. உறுப்பினர்களுக்கு மேலும் தெரிவிப்பதாவது:–
   i) வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அல்லது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மின்னணு வாக்களிப்பு முறை மூலம் பரிவர்த்தனை செய்யப்படலாம்.
   ii) கட்ஆப் தேதியின்படி, அதாவது, புதன்கிழமை, **ஜூலை 30, 2025** அன்று, காகித முறையில் அல்லது டீமெட்டிரிலைஸ்ட் முறையில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், CDSL–ன் மின்னணு வாக்குப்பதிவு முறையின் மூலம் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்கள் மீது மின்னணு முறையில் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்யலாம்.
   iii) தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு **ஞாயிற்றுக்கிழமை, ஆகஸ்ட் 03, 2025 அன்று இந்திய நேரப்படி காலை 9.00 மணிக்கு தொடங்கி செவ்வாய்க்கிழமை, ஆகஸ்ட் 05, 2025 அன்று இந்திய நேரப்படி மாலை 5.00 மணிக்கு** நிறைவடைகிறது.
5. வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு அனுப்பிய பின்னர் கம்பெனியின் பங்குகளை பெற்று உறுப்பினர் ஆனவர் மற்றும் கட் ஆப் தேதியான (ஜூலை 30, 2025) அன்று பங்குகளை வைத்துள்ளவர் என்எஸ்டிஎல்/சிடிஎஸ்எல் சான்றுகளை பயன்படுத்தி வாக்களிக்கலாம்.
6. உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியது:
   i) ஆகஸ்ட் 05, 2025 அன்று மாலை 5.00 மணிக்கு பின்னர் சிடிஎஸ்எல்–லினால் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு நிறுத்தப்படும் மற்றும் ஒரு தீர்மானத்தின் மீது உறுப்பினர் வாக்களித்துவிட்டால், அதனை பின்னர் மாற்ற உறுப்பினர் அனுமதிக்கப்பட மாட்டார்.
   ii) வருடாந்திர பொதுக்கூட்டத்தின்போது வாக்களிப்பு வசதி செய்யப்படும் மற்றும் VC வசதி மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்கும் உறுப்பினர், தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலமாக வாக்களிக்காதவர் மற்றும் அவ்வாறு செய்ய தடை விதிக்கப்படாதவர்கள் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மின்னணு முறையில் வாக்களிக்கலாம்.
   iii) வருடாந்திர பொதுக்கூட்டத்திற்கு முன்னதாக தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் வாக்களித்த உறுப்பினர்கள், வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமை கிடையாது மற்றும்
   iv) கட் ஆப் தேதியன்று உறுப்பினர்கள் பதிவேடு அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் பயனுள்ள உரிமையாளர்கள் பதிவேட்டில் பதிவாகி உள்ள பெயர்களில் உள்ள நபர்கள் மட்டுமே தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அல்லது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்கும் வசதியை பெற தகுதி உடையவர்கள் ஆவர்.
7. டீமெட்டிரிலைஸ்ட் முறையில், காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்களுக்கும், மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாத உறுப்பினர்களுக்கும் தொலைதூரத்தில் இருந்து வாக்களிக்கும் முறை வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளது.
8. வருடாந்திர பொதுக் கூட்டம் மற்றும் இறுதி ஈவுத்தொகை அறிவிக்கும் (உறுப்பினர்களின் ஒப்புதலுக்கு உட்பட்டது) நோக்கத்திற்காக உறுப்பினர்கள் பதிவேடு ஜூலை 30, 2025 முதல் ஆகஸ்ட் 6, 2025 வரை (இரண்டு நாட்களும் உட்பட) மூடப்பட்டிருக்கும். வருடாந்திர பொதுக் கூட்டத்தொடர் மற்றும் இறுதி ஈவுத்தொகைக்கான பதிவுத் தேதி புதன்கிழமை, 30 ஜூலை 2025 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
9. நிதிச் சட்டத்தின்படி, ஒரு நிதியாண்டுக்கு ₹10,000/- க்கு மேல் டிவிமெண்ட் வருமானம் உறுப்பினர்களின் கைகளில் வரிக்கு உட்பட்டதாக இருக்கும். வருமான வரிச் சட்டம், 1961ன் விதிகளின்படி, நிறுவனம் ஈவுத்தொகை செலுத்துதல்களிலிருந்து மூலத்தில் வரியை (TDS) பிடித்தம் செய்ய வேண்டும்.
10. மே 7, 2024 தேதியிட்ட SEBI முதன்மை சுற்றறிக்கையின்படி (நவம்பர் 17, 2023 தேதியிட்ட சுற்றறிக்கையுடன் படிக்கவும்), அனைத்து பட்டியலிடப்பட்ட நிறுவனங்களும் காகித வடிவிலான பத்திரங்களை வைத்திருக்கும் பங்குதாரர்களின் PAN, நாமினி, தொடர்பு விவரங்கள், வங்கிக் கணக்கு விவரங்கள் மற்றும் மாதிரி கையொப்பத்தைப் பதிவு செய்ய வேண்டும். மேலும், ஏப்ரல் 01, 2024 முதல், காகித வடிவிலான ஃபோலியோக்களுக்கான டிவிடெண்ட் கொடுப்பனவுகள் மின்னணு முறையில் செய்யப்பட்டுள்ளன. KYC–ஐ வழங்காத பங்குதாரர்களைப் பொறுத்தமட்டில் டிவிடெண்ட் தொகை, கோரப்படாத டிவிடெண்ட் கணக்கில் வைக்கப்படும். KYC மற்றும் வங்கி விவரங்கள் புதுப்பிக்கப்பட்டவுடன், பங்குதாரர்களுக்கு ஆர்டிஏ பணத்தை அனுப்பும்.
11. செபி (ஐசிடிஆர்) விதிமுறைகளின்படி, ஜூலை 2024ல் வெளியிடப்பட்ட மற்றும் ஒதுக்கப்பட்ட போனஸ் பங்குகள் அந்தந்த டீமேட் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ளன. காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்களுக்கு, போனஸ் பங்குகள் MMF உரிமை கோரப்படாத சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றப்பட்டன. அத்தகைய பங்குதாரர்கள் தங்கள் பங்குகளை தங்கள் டீமேட் கணக்குகளுக்கு மாற்றுவதற்காக தங்கள் KYC மற்றும் டீமேட் கணக்கு விவரங்களை உடனடியாக RTA விடம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
12. மின்னணு வாக்களிப்பு தொடர்பான கேள்விகள் அல்லது பிரச்சினைகள் இருந்தால், பங்குதாரர்கள் www.evotingindia.comல் கிடைக்கும் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் மற்றும் மின்னணு வாக்களிப்பு கையேட்டைப் பார்க்கலாம் அல்லது helpdesk.evoting@cdslindia.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதலாம் அல்லது 18002109911 என்ற கட்டணமில்லா எண்ணை அழைக்கலாம்.
13. கம்பெனியின் ஆர்டிஏ M/s. கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட், சுப்ரமணியன் பில்டிங், 1 கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை 600 002, தொலைபேசி எண். 044-40020700, மின்னஞ்சல் முகவரி: murali@cameoindia.com; மற்றும் அல்லது investors3.cameoindia.comல் அணுகலாம்.
14. மின்னணு முறையில் வாக்களிப்பு வசதி தொடர்பான அனைத்து குறைகளுக்கு திரு. ராகேஷ் டால்வி, முதுநிலை மேலாளர், சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட், ஏ விங், 25வது மாடி, மராத்தான் பியூச்சரக்ஸ், மபதலால் மில் வளாகம்,, என்.எம். ஜோஷி மார்க், லோயர் பரேல் (கிழக்கு), மும்பை 400013 அல்லது helpdesk.evoting@cdslindia.comக்கு மின்னஞ்சல் அனுப்பலாம் அல்லது 1800 210 9911ல் தொடர்பு கொள்ளலாம்.

எம் எம் போர்ஜிங்ஸ் லிமிடெட்டுக்காக
சந்திரசேகர் S
கம்பெனி செயலாளர்

இடம் : சென்னை
தேதி : 14 ஜூலை, 2025

ஈசாப் இந்தியா லிமிடெட் ESAB

CIN: L29299TN1987PLC058738

பதிவு அலுவலகம்: பிளாட் எண். 13, 3-வது பிரதான சாலை, தொழிற்பேட்டை, அம்பத்தூர், சென்னை - 600 058

தொ.பேசி எண்.: 044-4228 1100 மின்னஞ்சல் முகவரி: investor.relations@esab.co.in

AGM பற்றிய அறிவிப்பு

A) நிறுவனத்தின் பங்குதாரர்களின் முப்பத்தெட்டாவது (38-வது) ஆண்டு பொதுக் கூட்டம் ("AGM') 14 ஆகஸ்ட் 2025 வியாழன் அன்று பிற்பகல் 3.30 மணிக்கு வீடியோ கான்ஃபரன்ஸிங் (VC) / பிற ஒளி ஒலி வழி முறையின் (OAVM) மூலம் பின்வருவனவற்றை நிறைவேற்றுவதற்காக நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

1. மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த நிதியாண்டிற்கான நிறுவனத்தின் தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகளை, இயக்குநர்கள் மற்றும் தணிக்கையாளர்களின் அறிக்கைகளுடன் பரிசீலித்து, ஏற்று, அங்கீகரிப்பது.
2. ரூ.10/- மதிப்புள்ள ஒவ்வொரு ஈக்விட்டி பங்கிற்கும் ரூ.42/- இறுதி ஈவுத்தொகையை அதாவது 420% என்பதை அறிவிப்பது.
3. சுழற்சி முறையில் ஓய்வு பெறும் மற்றும் மறு நியமனத்திற்கு தகுதியுடைய 06686250 என்ற இயக்குநர் அடையாள எண்கொண்ட, திரு. ரோஹித் கம்பீரை இயக்குனராக நியமிப்பது.
4. திரு. வி. மகேஷ் சென்னை, நிறுவன செயலாளர் அவர்களை 2025-26 நிதியாண்டு முதல் 2029-30- வரை அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு நிறுவனத்தின் செயலக தணிக்கையாளராக நியமிப்பதுடன், அவருடைய ஊதியத்தை நிர்ணயிப்பதற்காக நிறுவன இயக்குநர் குழுவிற்கு அங்கீகாரம் வழங்கவும்.
5. செலவு தணிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டிய ஊதியத்திற்கு பின்னேற்பு அளிப்பது.
6. ESAB ஈரோப் GmbH, சுவிட்சர்லாந்து, தொடர்புடைய தரப்புடன் பொருள் பரிவர்த்தனைகளுக்கான (material transactions) ஒப்புதல்.
7. EWAC அல்லாய்ஸ் லிமிடெட், இந்தியா தொடர்புடைய தரப்புடன் பொருள் பரிவர்த்தனைகளுக்கான (material transactions) ஒப்புதல்.

செப்டம்பர் 19, 2024 தேதியிட்ட MCA சுற்றறிக்கை எண் 09/ 2024-ன்படி, 2024-25-ஆம் ஆண்டிற்கான வருடாந்திர அறிக்கையுடன் கூடிய AGM அறிவிப்பு, ஜூலை 4, 2025 அன்றைய நிலவரப்படி உறுப்பினர்களாக இருந்தவர்களின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிகளுக்கு ஜூலை 14, 2025 திங்கட்கிழமை அன்று மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. பங்குதாரர்களின் குறிப்பிட்ட கோரிக்கையின் அடிப்படையில், AGM பற்றிய அறிவிப்பு மற்றும் ஆண்டு அறிக்கையின் பிரதிகள் அவர்களுக்கு அனுப்பப்படும் என்பதை நினைவில் கொள்ளவும்.

38-வது AGM பற்றிய அறிவிப்பு, வருடாந்திர அறிக்கை மற்றும் மின்னணு வாக்களிப்புக்கான வழிமுறைகள் நிறுவனத்தின் வலைத்தளமான **www.esabindia.com**-ல் கிடைக்கின்றன. வருடாந்திர அறிக்கையைப் பெறாத உறுப்பினர்கள், நிறுவனத்தின் வலைத்தளத்திலிருந்தும் மற்றும் பங்குச் சந்தையின் வலைத்தளமான BSE லிமிடெட் www.bseindia.com மற்றும் தேசிய பங்குச் சந்தை லிமிடெட் www.nseindia.com மற்றும் NSDL-ன் வலைத்தளமான www.evoting.nsdl.com ஆகியவற்றிலிருந்து அதைப் பதிவிறக்கம் செய்யலாம்.

மே 27, 2025 தேதியிட்ட AGM பற்றிய அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, கீழ்க்காணும் முறையில் வாக்களிப்பதன் மூலம் பரிவர்த்தனையை நிறைவேற்றலாம்:

I) **தொலைநிலை மின்னணு-வாக்குப்பதிவு :** 2014-ன் விதி 20 மற்றும் இந்திய செக்யூரிட்டீஸ் எக்ஸ்சேஞ்ச் போர்டின் (SEBI) பட்டியலிடும் கடமை மற்றும் வெளியிடல் தேவைகள் (LODR), விதிமுறைகள், 2015-ன் விதி 44 உடன் இணைத்து நிறுவனங்கள் சட்டம், 2013-ன் பிரிவு 108, நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகளுக்கு உட்பட்டு.

தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவானது 11 ஆகஸ்ட் 2025, திங்கள் கிழமை காலை 9:00 மணிக்குத் தொடங்கி 13 ஆகஸ்ட் 2025, புதன்கிழமை மாலை 5:00 மணிக்கு முடிவடைகிறது.

மேற்குறிப்பிட்ட வாக்களிப்பு தேதி மற்றும் நேரத்திற்குப் பிறகு தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு. NSDL-னால் நிறுத்தப்படும். மேலும், ஒரு தீர்மானத்தின் மீது உறுப்பினர் வாக்களித்தபின் அதை அவரால் மாற்ற இயலாது.

II) **மின்னணு வாக்குப்பதிவு:** வீடியோ கான்ஃபரன்ஸிங் (VC) / பிற ஒலி-ஒளி வழிமுறைகள் (OAVM) மூலம் கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள் மற்றும் தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு மூலம் ஏற்கனவே வாக்களிக்காத உறுப்பினர்கள், AGM-ன்போதும் மற்றும் ஆகஸ்ட் 14, 2025 அன்று வாக்குப்பதிவு முடியும்வரையும் மின்னணு வாக்குப்பதிவு மூலம் தங்கள் வாக்கைப் பதிவு செய்யலாம்.

தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு மூலம் ஏற்கனவே வாக்களித்த உறுப்பினர்கள் மீண்டும் வாக்களிக்க உரிமை பெற மாட்டார்கள், ஆனால் AGM-ல் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள்.

கட்-ஆஃப் தேதியான ஆகஸ்ட் 7, 2025, அதாவது வியாழக்கிழமை அன்று, தாள் வடிவிலோ அல்லது டிமெட்டீரியலைஸ்டு வடிவிலோ பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், NSDL-ன் மின்னணு வாக்குப்பதிவு முறை மூலம் ஆண்டு AGM பற்றிய அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானங்களின்மீது மின்னணு முறையில் தங்கள் வாக்கைப் பதிவு செய்யலாம். அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு, அதாவது ஆகஸ்ட் 7, 2025 வியாழக்கிழமைக்குப் பிறகு நிறுவனத்தின் பங்குகளைப் பெற்று, நிறுவனத்தின் உறுப்பினராக மாறி, பங்குகளை வைத்திருக்கும் எந்தவொரு நபரும், மின்னஞ்சல் முகவரி evoting@nsdl.com-க்கு கோரிக்கையை அனுப்பி லாகின் ஐடி மற்றும் கடவுச்சொல்லைப் பெறலாம். இருப்பினும், அவர் ஏற்கனவே தொலைநிலை மின்னணு வாக்களிப்புக்காக NSDL-ல் பதிவுசெய்திருந்தால், அவர் மின்னணு வாக்கு செலுத்துவதற்கு ஏற்கனவே இருக்கும் பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தலாம்.

AGM-ல் நடைபெற்ற மின்னணு வாக்குப்பதிவு மற்றும் தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு ஆகியவற்றின் முடிவுகள் AGM முடிந்து இரண்டு வேலை நாட்களுக்குள் பங்குச் சந்தைகளுக்கு அறிவிக்கப்படும். அறிவிக்கப்பட்ட முடிவுகள் ஆய்வாளரின் (ஸ்குரூட்டினைசரின்) அறிக்கையுடன், நிறுவனத்தின் வலைத்தளமான www.esabindia.com-ல் வெளியிடப்பட்டு, நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் உள்ள அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்படும்.

B) **ஆய்வாளர் (ஸ்குரூட்டினைசர்) :**

வருடாந்திர பொதுக் கூட்டத்திற்கான தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் மின்னணு வாக்குப்பதிவு ஆகியவற்றை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் நடத்துவதற்காக, ஸ்குரூட்டினைசராக தற்போதைய நிறுவனச் செயலாளரான CS V மகேஷ் அவர்களை இயக்குநர்கள் குழு நியமித்துள்ளது. மேலும், அத்தகைய நியமனத்திற்கு அவர் விருப்பம் தெரிவித்து, அதே நோக்கத்திற்காகவே இருப்பார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இயக்குநர்கள் குழுவின் ஆணைப்படி
G பாலாஜி
நிறுவனச் செயலர்

சென்னை
15 ஜூலை, 2025

SAKSOFT your digital transformation partner

சாக்சாப்ட் லிமிடெட்

CIN: L72200TN1999PLC054429

பதிவு மற்றும் கார்ப்பரேட் அலுவலகம்: குளோபல் இன்போசிட்டி பார்க், 2வது தளம், பிளாக்–A, எண். 40, டாக்டர் எம்.ஜி.ஆர். சாலை, கந்தன்சாவடி, பெருங்குடி, சென்னை – 600 096.

Phone: +91-44-2454 3500; Fax: +91-44-2454 3510;

Email: complianceofficer@saksoft.co.in; Web: www.saksoft.com

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு

நிறுவனங்கள் சட்டம், 2013ன் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும் செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015 மற்றும் பொது சுற்றறிக்கை எண்கள். ஏப்ரல் 08, 2020 தேதியிட்ட 14/2020, மே 05, 2020 தேதியிட்ட 20/2020 மற்றும் அதைத் தொடர்ந்து சுற்றறிக்கை எண். செப்டம்பர் 09, 2024 தேதியிட்ட 09/2024 (ஒட்டுமொத்தமாக “எம்சிஏ சுற்றறிக்கைகள்” என்று குறிப்பிடப்படுகிறது) மற்றும் செக்யூரிட்டீஸ் அன்ட் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா ("செபி") வெளியிட்ட அக்டோபர் 3, 2024 தேதியிட்ட SEBI/HO/CFD/CFD-PoD-2/P/CIR/2024/133 மற்றும் கார்ப்பரேட் விவகார அமைச்சகம் (எம்சிஏ), இந்திய அரசு மற்றும் செபி ஆகியவற்றால் வெளியிடப்படும் பிற பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள் ஆகியவற்றுக்கு இணங்க, வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வணிகங்களை பரிவர்த்தனை செய்ய சாக்சாப்ட் லிமிடெட்டின் ("நிறுவனம்") 26வது வருடாந்திர பொதுக்கூட்டம் ("AGM") காணொளி காட்சி ("VC") / இதர ஆடியோ காட்சி முறை ("OAVM") மூலம் வெள்ளிக்கிழமை, ஆகஸ்ட் 08, 2025 அன்று காலை 10.30 மணிக்கு (இந்திய நேரப்படி) நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பின் மின்னணு பிரதிகள், மின்னணு வாக்குப்பதிவுக்கான நடைமுறை மற்றும் வழிமுறைகள் மற்றும் 2024-25 நிதியாண்டுக்கான வருடாந்திர அறிக்கை ஆகியவை நிறுவனம்/டெபாசிட்டரிகளில் மின்னஞ்சல் முகவரிகள் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் மின்னணு முறையில் அனுப்பப்படும். தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யாத உறுப்பினர்கள், தங்கள் டெபாசிட்டரி பங்கேற்பாளர் (கள்) மூலம் டெபாசிட்டரியுடன் மின்னணு வடிவத்தில் வைத்திருக்கும் பங்குகளைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். காகித வடிவத்தில் வைத்திருக்கும் பங்குகளைப் பொறுத்தவரை, உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரியை நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் ("ஆர்டிஏ") கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட், சுப்ரமணியன் பில்டிங், 1, கிளப் ஹவுஸ் சாலை, அண்ணாசாலை, ராயப்பேட்டை, சென்னை, தமிழ்நாடு 600002க்கு, முறைப்படி பூர்த்தி செய்யப்பட்ட https://www.saksoft.com/investor/investor-forms/ல் கிடைக்கும் படிவம் ISR-1 உடன் பதிவு செய்யலாம்.

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் நிறுவனத்தின் 2024-25 நிதியாண்டுக்கான வருடாந்திர அறிக்கை ஆகியவை நிறுவனத்தின் இணையதளம் https://www.saksoft.com/investor/annual-report/ மற்றும் பங்குச் சந்தைகளின் இணையதளங்கள் அதாவது, பிஎஸ்இ லிமிடெட் மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட் முறையே www.bseindia.com மற்றும் www.nseindia.comல் கிடைக்கும்.

செபியின் சட்டம் மற்றும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள், 2015ன் (பட்டியல் கடமை மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) ("LODR") ஒழுங்குமுறை 44 மற்றும் நிறுவனங்கள் சட்டம் 2013ன் பிரிவு 108 மற்றும் நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014 விதி 20 ஆகியவற்றிற்கு இணங்க நிறுவனம் தனது பங்குதாரர்களுக்கு தொலைதூர மின்னணு வாக்களிக்கும் வசதியை வழங்கியுள்ளது.

வருடாந்திர பொதுக் கூட்டத்துக்கு முன்னதாக தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் VC மூலம் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம், ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமை பெற மாட்டார்கள். தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களிக்காத உறுப்பினர்கள் மற்றும் VC மூலம் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்பவர்கள், வருடாந்திர பொதுக் கூட்டத்தில் மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களிக்கத் தகுதியுடையவர்கள்.

மே 26, 2025 அன்று நடைபெற்ற இயக்குநர்கள் குழு கூட்டத்தில் ஒரு பங்கிற்கு ரூ.0.40/- இறுதி ஈவுத்தொகையை குழு பரிந்துரைத்துள்ளது என்பதை பங்குதாரர்கள் கவனிக்கலாம். இறுதி ஈவுத்தொகை, நடைபெறவிருக்கும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் உறுப்பினர்களால் அங்கீகரிக்கப்பட்டதும், தங்கள் வங்கிக் கணக்கு விவரங்களைப் புதுப்பித்த பங்குதாரர்களுக்கு பல்வேறு ஆன்லைன் பரிமாற்ற முறைகள் மூலம் மின்னணு முறையில் செலுத்தப்படும். தங்கள் வங்கிக் கணக்கு விவரங்களைப் புதுப்பிக்காத பங்குதாரர்களுக்கு, ஈவுத்தொகை வாரண்டுகள் / டிமாண்ட் டிராஃப்ட்கள் / காசோலைகள் அவர்களின் பதிவு செய்யப்பட்ட முகவரிகளுக்கு அனுப்பப்படும். ஈவுத்தொகை பெறுவதில் தாமதத்தைத் தவிர்க்க, பங்குதாரர்கள் தங்கள் டெபாசிட்டரிகள் (பங்குகள் மின்னணு வடிவில் இருந்தால்) மற்றும் ஆர்டிஏ (பங்குகள் காகித வடிவில் இருந்தால்) ஆகியவற்றுடன் தங்கள் KYC ஐ புதுப்பித்து, செலுத்தும் தேதியில் நேரடியாக தங்கள் வங்கிக் கணக்கில் ஈவுத்தொகையைப் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மின்னணு முறையில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், முகவரி மாற்றம் மற்றும் வங்கிக் கணக்கு விவரங்களைப் பற்றிய அறிவிப்புகளை அந்தந்த டெபாசிட்டரி பங்கேற்பாளர்களுக்கு நேரடியாக அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பங்குதாரர்கள் சரியான நேரத்தில் ஈவுத்தொகையைப் பெறுவதற்கு எலக்ட்ரானிக் கிளியரிங் சிஸ்டம் (ECS) முறையைத் தேர்வுசெய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வருமான வரிச் சட்டம் 1961 (“IT சட்டம்”) நிதிச் சட்டம், 2020ஆல் திருத்தப்பட்டபடி, ஏப்ரல் 1, 2020 அன்று அல்லது அதற்குப் பிறகு ஒரு நிறுவனத்தால் செலுத்தப்படும் அல்லது விநியோகிக்கப்படும் ஈவுத்தொகை பங்குதாரர்களின் கைகளில் வரி விதிக்கப்படும் என்பதை பங்குதாரர்கள் கவனத்தில் கொள்ளவும். எனவே, இறுதி ஈவுத்தொகையைச் செலுத்தும் போது, நிறுவனம் மூலத்தில் வரியை (TDS) கழிக்க வேண்டும். வரி விகிதங்களின் விவரங்கள் மற்றும் ஈவுத்தொகை குறித்த மற்ற வரி தொடர்பான தகவல்கள் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளன.

மின்னணு வாக்களிக்கும் உறுப்பினர்கள் அது குறித்த விரிவான வழிமுறைகளுக்கு, வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் உள்ள “குறிப்புகள்” பகுதியைப் பார்க்கவும்.

மின்னணு வாக்குப்பதிவு நடைமுறை தொடர்பான கேள்விகள் அல்லது குறைகள் இருந்தால், பங்குதாரர்கள். www.evotingindia.comன் பதிவிறக்கப் பிரிவில் கிடைக்கும் பங்குதாரர்களுக்கான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) மற்றும் பங்குதாரர்களுக்கான மின்னணு வாக்களிப்பு பயனர் கையேட்டைப் பார்க்கவும் அல்லது திரு. ராகேஷ் தல்வி, மேனேஜர், சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட், ஏ விங், 25வது தளம், மராத்தன் ஃப்யூச்சர்க்ஸ், மஃபத்லால் மில் காம்பௌண்ட்ஸ், என் எம் ஜோஷி மார்க், லோயர் பரேல் (கிழக்கு), மும்பை 400 013 அவர்களை தொடர்பு கொள்ளலாம் அல்லது helpdesk.evoting@cdslindia.com க்கு மின்னஞ்சல் அனுப்பவும் அல்லது 1800 21 09911 என்ற எண்ணிற்கு அழைக்கவும்.

குழு உத்தரவின்படி
சாக்சாப்ட் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/-
மீரா வெங்கட்ரமணன்
நிறுவனச் செயலர்

இடம்: சென்னை
தேதி: ஜூலை 15, 2025